இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 06-08-2024

# கலைஞரின் சட்டமும் வரலாற்றுத் தீர்ப்பும்

**அருந்ததியர் மக்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது என்றால், அதன் முழுப்பெருமையும் தமிழினத் தலைவர் கலைஞரைச் சாரும். இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சாரும். அதனால்தான் அருந்ததியர் அமைப்பினர், அனைவருமே (45 அமைப்பினர்) அண்ணா அறிவாலயம் வருகை தந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துச் சென்றுள்ளார்கள்.**

"ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் நமது திராவிட மாடல் பயணத்திற்கான மற்றுமோர் அங்கீகாரமாக இன்றைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது. முறையாக குழு அமைத்து அதன் மூலம் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அருந்ததியர் சமுதாயத்திற்கான 3 சதவிகித உள் ஒதுக்கீட்டை தலைவர் கலைஞர் கொடுக்க, அதற்கான சட்ட முன் வடிவை பேரவையில் நான் அறிமுகம் செய்து நிறைவேற்றித் தந்தோம். இந்தச் சட்டத்தை உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு உறுதி செய்திருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**'எங்களது 50 ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்து விட்டீர்கள்' என்ற பாராட்டுச் சொல்லுக்குப் பின்னால் அரைநூற்றாண்டு அரசியல் வரலாறு இருக்கிறது என்பதுதான் உண்மை.**

அருந்ததியர் மக்களின் மேன்மைக்காக 2008 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் திட்ட மிட்டார்கள். எதையும் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செய்யக் கூடியவர் அல்ல முதல்வர் கலைஞர். சட்டபூர்வமான அனைத்தையும் படிப்படியாகச் செய்யத் திட்டமிட்டார். சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் 25.3.2008 அன்று குழு அமைத்தார் முதல்வர் கலைஞர். அக்குழு, "அருந்ததியர் மக்களுக்கு தனிக் கவனம் தேவை, அவர்கள் உரிய விகிதாச்சாரத்தைப் பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். அருந்ததியர் மக்களுக்கு சிறப்புச் சலுகை தர வேண்டும்" என்று அக்குழு பரிந்துரைத்தது.

பட்டியலின ஒதுக்கீடாக இருக்கும் 18 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் இருந்து 3 விழுக்காடு அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்குவதற்காக 27.11.2008 அன்று கூடிய தமிழ்நாடு அமைச்சரவை முடிவு செய்தது. அந்தக் காலக் கட்டத்தில் முதுகு வலி காரணமாக ஒரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு மருத்துவமனையில் இருந்தார் முதலமைச்சர் கலைஞர். அந்தச் சூழலில் கலைஞரின் வார்ப்பாக அப்போதைய துணை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், அருந்ததி யினருக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் சட்ட முன்வடிவை பேரவையில் 26.2.2009 அன்று அறிமுகம் செய்து நிறைவேற்றினார். 29.4.2009 இல் இது தொடர்பான விதிகள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்றைக்கு அருந்ததியர் மக்கள் அடைந்துள்ள உயரம் என்பது மிக மிக அதிகம் ஆகும்.

உள் ஒதுக்கீடு வழங்கும் சட்டத்துக்கு எதிராகச் சிலர் வழக்கு தொடுத்திருந்தார்கள். "தமிழ்நாடு அரசின் அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம் செல்லும்" என்று 2020 ஆம் ஆண்டே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.

இப்போது தீர்ப்பு வந்துள்ள வழக்கானது, ஆந்திர மாநிலம் தொடர்புடையது. அந்த மாநிலத்தில் உள் ஒதுக்கீடு வழங்கியது தொடர்பாக ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, 'அதைச் செல்லாது' என்று 2015 ஆம் ஆண்டு தீர்ப்பு அளித்திருந்தது. இந்த வழக்கில் இன்றைய தமிழ்நாடு அரசு தன்னை இணைத்துக் கொண்டு வாதங்களை வைத்தது. 'உள் ஒதுக்கீடு தேவை' என வலிமையாக வாதிட்டது. இந்த வழக்கை ஏழு நீதிபதிகள் அமர்வு விசாரித்து, 'செல்லும்' என்று தீர்ப்பளித்துள்ளது. இதன் மூலமாக தமிழ்நாடு அரசின் சட்டமும் செல்லும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

உள் ஒதுக்கீடுக்கு மட்டுமல்ல, சமூகநீதியை வலிமைப்படுத்துவதாக இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது. **"பட்டியலின, பழங்குடியினருக்கான உள் ஒதுக்கீடு அளிப்பது அரசமைப்புச் சாசனத்தின் 15,16,341 ஆகிய பிரிவுகளுக்கு எதிரானது அல்ல. அரசமைப்புச் சாசனத்தின் பாகுபாட்டைத் தடுக்கும் பிரிவும், வேலைவாய்ப்பில் சம வாய்ப்பை அளிக்கும் பிரிவும் பட்டியலின, பழங்குடியினருக்கான உள் ஒதுக்கீட்டை மாநிலங்கள் அளிப்பதற்குத் தடையாக இல்லை. பட்டியலின பழங்குடியினர் பிரிவிலுள்ள பின் தங்கிய சமூகத்தினருக்கு உள் ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும். அப்படி வழங்கும் போது, அந்தச் சமூகத்துக்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்ற தரவுகள் நியாயப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்"** என்று ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வில் ஆறு நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளார்கள்.

சமூக துணை வகைப்படுத்துதல் மேற்கொண்டு உள் இடஒதுக்கீடு வழங்க மாநிலங்களுக்கு அரசமைப்பு அதிகாரம் உண்டு என்று சொல்வதன் மூலமாக மாநில உரிமையும் நிலை நாட்டப்பட்டுள்ளது.

**இது அருந்ததியர் இனத்துக்கு கிடைத்த வெற்றி. சமூக நீதிக்குக் கிடைத்த வெற்றி. மாநில உரிமைகளுக்குக் கிடைத்த வெற்றி. மொத்தத்தில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனைக்குக் கிடைத்த வெற்றி இது. 'திராவிட மாடல்' முதலமைச்சருக்குக் கிடைத்த வெற்றி.**





சென்னை, பல்லவன் இல்லம், மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நேற்று முன்தினம் (4.8.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 66.15 கோடி ரூபாய் மதிப்பிலான 100 புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேருந்துகளை, பொது மக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி,மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான்வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### மாநகர் போக்குவரத்துக் கழக மத்தியப் பணிமனையில்

# ரூ. 66.15 கோடி மதிப்பில் - 100 புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள்!

## இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 6 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (4.8.2024) சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 66.15 கோடி ரூபாய் மதிப்பிலான 58 புதிய BS-VI தாழ்தள பேருந்துகள், 30 சாதாரண BS-VI பேருந்துகள் மற்றும் 12 புதுப்பிக்கப்பட்ட பேருந்துகள் என மொத்தம் 100 பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:-

மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 611 தாழ்தள பேருந்துகள் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 58 தாழ்தள பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட உள்ளது. புதிய பேருந்தில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் எளிதாக ஏறிச் செல்லும் வகையில் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்கள் உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைவரும் எளிதில் ஏறி இறங்க வசதியாக பேருந்தின் தளம் 400 மி.மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தாழ்தளத்தின் உயரத்தை இடது புறத்தில் 60 மி.மிட்டர் அளவில் சாய்த்து மிக எளிதாக ஏறி, இறங்கும் படி kneeling வசதி உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் வீல்சேர் ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் சாய்தளம் வசதியும், வீல்சேருடன் அமர்ந்து பயணம் செய்ய தனி இட வசதியும் உள்ளது.

தானியங்கி கதவுகள் மூடினால் மட்டுமே பேருந்தை நகர்த்த முடியும்.

பேருந்து நிறுத்தத்தை முன் கூட்டியே அறிந்து கொள்ளும் வகையில், ஒலி பெருக்கி மற்றும் காட்சி மூலம் தெரிவிக்கும் LED DISPLAY BOARD பொருத்தப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட அகலமான குஷன் இருக்கைகள் மற்றும் இட வசதி அதிகரிப்பதற்காக பேருந்தின் நீளம் 12 மீட்டர் மற்றும் காற்றோட்ட வசதி அதிகரிக்க அகலமான ஜன்னல்கள் பொருத்தப்பட்டுள்ளது.

ஓட்டுநர் பேருந்தை பின்நோக்கி பாதுகாப்பாக இயக்க "Rear view camera", பேருந்தில் ஆட்டோமேட்டிக் கியர்பாக்ஸ், புதிய வடிவிலான Dash board அமைக்கப்பட்டுள்ளது.

பேருந்தின் முன்புறம் ஓட்டுநர் பார்வை மறைக்கும் இடத்தை கவனிக்க "Blind Spot Mirror" பொருத்தப்பட்டுள்ளது.

என்ஜினில் கூடுதல் வெப்பம் காரணமாக தீப்பற்றக் கூடிய சூழ்நிலை வந்தால், அணைப்பதற்கு Sensor உடன் கூடிய Fire Safety Nozzle Engine மேல் பகுதியில் உள்ளது.

மேலும், "விடியல் பயணத் திட்டத்தின்" வாயிலாக பணிபுரியும், சுய தொழில் புரியும் மகளீர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் உள்ளிட்டோர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 102 கோடிக்கு மேல் பயண நடைகள் மேற்கொண்டுள்ளது, அவர்களது வாழ்வின் முன்னேற்றத்திற்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது.

இந்நிகழ்வில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் , இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டம் அத்திக்கடவு - அவிநாசி திட்டப்பணிகள்!

# தொடர்புடைய துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்!

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை!

ஈரோடு, ஆக. 6 –

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், அத்திக்கடவு – அவிநாசி திட்ட முன்னேற்ற நிலை தொடர்பான ஆய்வுக்கூட்டம், நேற்று முன்தினம் (04.08.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாள் முதல் அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தில் சிறப்பு கவனம் செலுத்தி திட்டப்பணிகளின் நிலை குறித்து தொடர்ந்து, கேட்டறிந்து வருவதுடன், விரைவாக இத்திட்டத்தினை முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள்.

இத்திட்டத்தில் மொத்தம் உள்ள 6 நீரேற்று நிலையங்களில் 1 முதல் 3 நீரேற்று நிலையங்கள் உள்ள பகுதிகளில் நிலம் கையகப்படுத்துவதில் சிறு தொய்வு ஏற்பட்டதன் காரணமாக பணிகள் சிறு காலதாமதமானது. நீரேற்று நிலையம் 1 முதல் 3 இடையில் உள்ள பட்டா நிலங்களின் வழியாக பிரதான குழாய் பதிக்கும் பணிகளை தொடங்கும் முன் நில இழப்பீடு மற்றும் பயிர் இழப்பீடு தொகை வழங்கிய பின் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதால் ஜூன் 2021 முதல் ஆகஸ்ட் 2022 வரை அப்பகுதியில் குழாய் பதிக்கும் பணிகளை தொடங்க இயலவில்லை.

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நீர்வளத்துறை அலுவலர்கள் மூலம் பல்வேறு பேச்சுவார்த்தை கூட்டம் நடத்தப்பட்டும் நில உரிமையாளர்கள் முன் வரவில்லை. தொடர்ந்து நில உரிமையாளர்களிடம் அரசின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு செப்டம்பர் 2022 முதல் குழாய் பதிக்கும் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு ஜனவரி 2023ல் பணிகள் முடிக்கப்பட்டது.

அதன் பின்னர் 20.02.2023 அன்று சோதனை ஓட்டப்பணிகள் தொடங்கப்பட்டது. இருப்பினும் பயன்பாடு இல்லாத காரணத்தால் பல்வேறு இணைப்பு குழாய்களில் பழுது ஏற்பட்டு நீர்க்கசிவு ஏற்பட்டு வந்தது.

தொடர்ந்து, பிற துறைகள் மூலம் கிளைக் குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளை சரிசெய்து ஜூன் 2023ல் 750 குளம் குட்டைகளுக்கு தண்ணீர் கொண்டு சேர்க்கப்பட்டது, அதன் பின்னர் போதிய உபரி நீர் காலிங்கராயன் அணைக்கட்டில் இல்லாத காரணத்தினால் மீண்டும் நவம்பர் 2023ல் தொடங்கப்பட்டு ஜனவரி 2024ல் 1045 குளங்களுக்கும் தண்ணீர் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. மார்ச் 2024 முதல் உபரிநீர் காலிங்கராயன் அணைக்கட்டில் இல்லாத காரணத்தினால் இத்திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலவில்லை. மேலும், 30.07.2024 முதல் காலிங்கராயன் அணைக்கட்டில் உபரிநீர் வரத்தொடங்கி, காவேரி ஆற்றில் வெள்ள நீர் வரத்தொடங்கியதால், இத்திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முன்னேற்பாடாக சோதனை ஓட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற ஆகஸ்ட் 15 அன்று உறுதியாக பவானிசாகரில் தண்ணீர் திறந்து விட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, தண்ணீர் திறந்து விட்ட பிறகு கிடைக்கும் அதிகப்படியான உபரிநீர் பெற்றவுடன் 6 நீரேற்று நிலையங்களிலும் ஒரே நேரத்தில் இயக்கும் வாய்ப்புகள் அமைந்தவுடன் உடனடியாக இத்திட்டப்பணியினை விரைவாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் இத்திட்டத்தில் தனி கவனம் செலுத்தி தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். மேலும் இத்திட்டத்தில் சிறு, சிறு பழுதுகள் ஏதேனும் இருப்பின் அந்த பழுதுகளையும் விரைந்து முடிக்க தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பட்டா நிலங்களின் வழியாகச் செல்லும் அத்திக்கடவு – அவிநாசி திட்டக் குழாய்களை இயக்கம் மற்றும் பராமரிப்பு காலங்களில் சென்று ஆய்வு மற்றும் பழுது பார்ப்பதற்கு ஏதுவாக நில உரிமையாளர்களுக்கு நிரந்தர குத்தகை மூலம் பாதை உரிமைத் தொகை பெறுவதற்கு ஒப்புக்கொண்டவர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, தற்பொழுது அரசாணை கிடைக்கப்பெறும் நிலையில் உள்ளது. அரசாணை பெற்றவுடன் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக நில உரிமையாளர்களிடம் பாதை உரிமைக்கான ஒப்பந்தம் இடப்பட்டு இழப்பீட்டு தொகை வழங்கப்படும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர், அத்திக்கடவு அவிநாசி திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட விவசாயிகளுடன், இத்திட்டம் தொடர்பான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர்கள் சதிஷ்குமார் (ஈரோடு), கண்ணப்பன் (கோபிசெட்டிபாளையம்), நீர்வள ஆதாரத்துறை கண்காணிப்பு பொறியாளர் திருமலைகுமார், செயற்பொறியாளர்கள் நரேந்திரன், சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் முகம்மது குதுரத்துல்லா (பொது), செல்வி.பிரேமலதா (நிலம்) உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கருஞ்சட்டை பதிப்பகம் சார்பில் ப.திருமாவேலன் எழுதிய 'கலைஞரின் பெரியார் நாடு' எனும் நூல் வெளியீட்டு விழா பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நூலை வெளியிட மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் நூலை பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் ப.திருமாவேலன் ஏற்புரை வழங்கினார். இதில் கருஞ்சட்டை பதிப்பகம் உரிமையாளர் பெல் ராஜன், பதிப்பாசிரியர் இக்லாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்